மே 2021 | ₹30.00

சம்பக்



சந்தாவிற்கு 9176654202 என்ற எண்ணிற்கு தகவல் அனுப்பவும்.
அல்லது delhipress.in என்ற இனையத்தில் பார்க்கவும்.
'இலவச இ-மாகஜின்' வருவதற்கு மேற்கண்ட எண்ணிற்கு தகவல் அனுப்பவும்.

HAEMOCAL®

Delicious Taste

SUNCARE
A WHO GMP COMPANY
SURE SAFE SECURE

அயர்ன் டானிக் குளுக்கோஸுடன்

பசியின்மை | ரத்தசோகை | தலைசுற்றல் | பலமின்மை

உங்களுடைய வாழ்க்கையில் அயர்ன் போலிக் அமிலத்தை சேர்த்து கொள்ளுங்கள். குழந்தை வளர்ச்சிக்கு, கர்ப்பகாலம், மாதவிடாய் காலத்தில் ஏற்படும் அயர்ன் குறைபாடுகளுக்கு ஹேமோகால் சிறந்த தீர்வாகும். இது ரத்தத்தில் RBC எண்ணிக்கையை அதிகரிக்க செய்து பலமின்மை, களைப்பை போக்குகிறது. இதன் தனித்துவமான குளுகோஸ் சேர்க்கப்பட்ட ஆரஞ்சு சுவை அதை இனிப்பாக இருக்க செய்கிறது.

STOMAFIT®

லிக்விட் & டேப்லெட்ஸ்

உங்கள் வயிற்றை ஃபிட் ஆகவும், ஆரோக்கியமாகவும் வைத்திருங்கள்

அதிக வாயு, நெஞ்சு எரிச்சல், வாந்தி, பேதி, மலச்சிக்கல், ஏப்பம், அஜீரணம், வாயுத்தொல்லையுடன் கூடிய நெஞ்சு வலி, வயிறு பிரட்டல் சேர்ந்த இந்த அறிகுறிகள்

மென்தால் மற்றும் தைமால் போன்றவற்றின் நற்குணங்களுடன்

SCAN TO BUY HAEMOCAL

Please contact for more information:

SUNCARE FORMULATIONS PVT. LTD.

Ph.: 8447977889/ 999, 011-46108735, Mail: info@stomafit.com

Available on all major Online Pharmacies

SCAN TO BUY STOMAFIT

சம்பக்

மே - 2021 மலர் : 266

கதை கேளு

தேர்தல்! 4
அன்பான நர்ஸ் சகோதரன்! 12
விசிறிகளின் ரசிகன்! 21
புரு, பெருமையான உதவியாளர்! 33
சாந்தமான ராணி! 43

முதல் பக்கம்

நீங்கள் இந்த ஆண்டு கோடை விடுமுறைகளை அனுபவிக்க போகிறீர்களா? இந்த சூழலில் சலிப்படைய வேண்டாம். பலவிதமான ஆக்டிவிடீஸ் கோடை காலத்தில் உள்ளன. அவற்றை கொண்டாடி மகிழுங்கள்.

நீங்களும் கலந்துக்குங்க!

17 புதிர்கள் உங்களுக்கு மட்டுமே

அழகாக வண்ணம் தீட்டவும் 8
வழிகாட்டு 9
சிரிங்க... சிரிங்க... 10
சொல்லு சொல்லு 18
வார்த்தை தேடல் 19
லாஜிக் மேஜிக் 20
புள்ளிகளை இணைக்கவும் 26
கண்டுபிடிக்கவும் 27
ஸ்மார்ட் 30
படத்தை பூர்த்தி செய் 32
சம்மர் மானியா 40
வெற்றிடத்தை நிரப்பு 41
வித்தியாசங்களை கண்டுபிடி 42
சுகாதார தேடல் 47

படக்கதை

டமரூ மற்றும் பேங்க் அக்கவுண்ட் 11
சீக்கூ 24
தாத்தாவும், சர்வதேச செவிலியர்... 38

சிறப்புப் பக்கம்

அறிவோம் ஆயிரம் 17
மேங்கோ பாப்சிக்கிள் 28
இது உங்கள் பக்கம் 48

ஆசிரியர் மற்றும் வெளியீட்டாளர் : பரேஷ் நாத்

சம்பக் (CHAMPAK TAMIL, MAY - 2021)
இது ஒரு டெல்லி பத்ர பிரகாஷன் பிரைவட் லிட். வெளியீடு. அச்சிடுபவர், பதிப்பாளர் மற்றும் ஆசிரியர் : பரேஷ் நாத்
மண்டல அலுவலகம் மற்றும் எடிட்டோரியல்: டெல்லி பிரஸ், சிசன்ஸ் காம்ப்ளக்ஸ் முதல் மாடி, 2/92, மாண்டியத் சாலை, எழும்பூர், சென்னை-600008
தொலைபேசி: 044-28554448
தலைமை அலுவலகம் : டெல்லி பிரஸ், E-8, ஜண்டேவாலா எஸ்டேட், ராணி ஜான்சி ரோடு, புதுடெல்லி - 110 055.
© டெல்லி பிரஸ் பத்ர பிரகாஷன் பிரைவட் லிட். அனுமதியின்றி கதைகளையோ வேறு படைப்புகளையோ பிறர் பயன்படுத்தக்கூடாது. சம்பக் கதை, கட்டுரைகளில் வரும் பெயர், இடம், நிகழ்ச்சிகள் அனைத்தும் கற்பனையே.
டெல்லி பிரஸ் பத்ர பிரகாஷன் பிரைவட் லிட்.க்காக பதிப்பாளர் மற்றும் அச்சிடுபவர் பரேஷ் நாத் சார்பில் பிஎஸ் பிசி பிரஸ் பிரைவேட் லிமிடெட், டிஎல்எஃப்-50, இன்டஸ்ட்ரியல் ஏரியா ஃபரிதாபாத், அரியானா-121003 மற்றும் டெல்லி பிரஸ், E-8, ஜண்டேவாலா எஸ்டேட், புது டெல்லியில் அச்சிடப்பட்டு மற்றும் E-8, ஜண்டேவாலா எஸ்டேட், புது டெல்லியிலிருந்து வெளியாகிறது.

***Editor, Publisher & Printer** PARESH NATH.*
Printed at PS PC Press Pvt. Ltd. DLF-50, Industrial Area, Faridabad, Haryana-121003. and Delhi Press E-8, Jandewala Estate New Delhi - 110 055 and Published on behalf of Delhi Press Patra Prakashan Private Ltd. From E-8, Jhandewala Estate, New Delhi - 110 055
ஆண்டுச் சந்தா : மணி ஆர்டர்/ டி.டி. மூலம் டெல்லி பிரகாஷன் வித்ரன் பிரைவட் லிமிடெட் என்ற பெயரில் E-3, ஜண்டேவாலா எஸ்டேட், புதுடெல்லி என்ற முகவரிக்கு அனுப்பவும். செக் மற்றும் VPP கிடையாது. பிரதி ரூ. 30, ஒரு ஆண்டுச் சந்தா ரூ.380, 2 ஆண்டுகளுக்கு ரூ.720.
COPY RIGHT NOTICE
© Delhi Press Patra Prakashan Private Ltd., New Delhi-110055. India. No article, story, photo or any other matter can be reproduced from this magazine without permission.
THIS COPY IS SOLD ON THE CONDITION THAT JURISDICTION FOR ALL DISPUTES CONCERNING PUBLISHED MATTER, SALE AND SUBSCRIPTION WILL BE COURTS/ FORUMS/TRIBUNALS AT DELHI.
நீங்கள் தங்கள் கதை, கவிதை, டிராயிங்குகள் மற்றும் கிராஃப்டை இதற்கும் அனுப்பலாம் : writetochampak@delhipress.in
www. facebook.com/ChampakMagazine, https://www.youtube.com/ChampakSciQ

தேர்தல்!

கதை ● ஆர்த்தி மண்ட்லோய்

சம்பக்வனம் மத்திய பிரதேசத்தில் உள்ள சத்பூரா மலைத் தொடரில் உள்ள அடர்த்தியான காடு. சிங்கராஜா அந்த நாட்டின் அரசர். அது தன் குடிமக்களை பற்றி நல்ல கவனம் செலுத்தும் சிறந்த அரசர். அவர் ஆட்சியில் மாமிசம் உண்ணும் விலங்குகளும் தாவரங்கள் உண்ணும் விலங்குகளும் ஒற்றுமையாக வாழ்ந்தன. காட்டில் உள்ள அனைவருக்கும் எப்போதும் போதுமான உணவும் தண்ணீரும் இருந்தது. எதை பற்றியும் புகார் எதுவுமில்லை. அதனால் சிங்கராஜா எல்லோராலும் விரும்பப்பட்டவர் மற்றும் அன்பு காட்டப்படுபவராக இருந்தது.

ஒரு நாள் சாண்டு பசு தண்ணீர் குடிப்பதற்காக நண்பர்களுடன் ஆற்றுக்கு சென்ற போது ஒரு புலி அதை தாக்கியது. புலி சம்பக்வனத்தை சேர்ந்தது அல்ல என்று தெரிந்து பசுவும் அதன் நண்பர்களும் பயந்து விட்டனர். அது எங்கிருந்து வந்தது என்றும் தெரியவில்லை. தாக்குதலில் பசுவுக்கு காயம் ஏற்பட்டது இருந்த போதிலும் அது ஒருவாறு உயிர்வாழ தப்பித்து கொண்டது.

பசு சிங்கராஜாவிடம் புலியை பற்றி காட்டிற்கு அது வெளியிடத்திலிருந்து வந்துள்ளது என்று புகார் செய்ய திட்டமிட்டது. சட்டத்தை மீறி புலி அப்பாவி விலங்குகளை காரணமின்றி தாக்கி கொண்டு வருகிறது. மற்ற விலங்குகளும் ஒப்புக் கொண்டு சாண்டு பசுவுடன் சிங்கராஜாவிடம் இதைச் சொல்ல சென்றன. அவை சிங்கத்தின் குகையை அடைந்ததும் அங்கு டான்னி மான், ஜம்பி குரங்கு மற்றும் கோகோ ஆடு போன்றவை ஏற்கனவே அங்கு இருந்தன. அவர்களில் பெரும்பாலோர் புலியால் தாக்கப்பட்டு காயம் பட்டிருந்தனர். அவர்களின் நண்பர்கள் சிலர் இறந்து விட்டார்கள். சிங்கம் வெளியே வந்ததும் சீக்கூ முயல் சிங்கத்திடம் எல்லாவற்றையும் கூறியது. மேலும் அந்த புலி எல்லா விலங்குகளையும் பயமுறுத்தி, காட்டின்

புதிய அரசனாக வர முயற்சி செய்கிறது என்றும் கூறியது. சிங்கராஜா இவர்கள் கூறியதை பொறுமையாக கேட்டது. பிறகு அது ஆற்றை நோக்கி உடனடியாக சென்றது. புலி ஆற்றின் அருகில் பதுங்கி கொண்டு விலங்குகள் கூட்டமாக தண்ணீர் குடிக்க ஆற்றுக்கு வரும் போது புலி அவர்களை தாக்கி காயப்படுத்தும். சிங்கராஜா ஆற்றை சென்றடைந்ததும் புலி அதை பார்த்து விட்டு, புதருக்குள் பின்னால் இருந்து கொண்டு பேசியது. சிங்கராஜா இப்போதிலிருந்து நான் காட்டை ஆளப் போகிறேன். அமைதியாக வெளியே போய் விடு. இல்லையெனில் உன்னையும் நான் தாக்குவேன்.

சிங்கராஜா கூறியது, “இந்த காடு என்னுடைய வீடு. காட்டிலுள்ள எல்லா விலங்குகளையும் பாதுகாப்பது என்னுடைய பொறுப்பு. நான் எங்கும் போகவில்லை. நீ என்னுடன் சண்டையிட விரும்பினால் வந்து என்னை எதிர்கொள்.”

புதருக்குள் பின்னாலிருந்து புலி சிங்கராஜா மீது பாய்ந்தது. சிங்கராஜா இந்த தீடீர் தாக்குதலுக்கு தயாராக இல்லை. அதனால் அது தவறி கீழே விழுந்தது. காட்டின் மற்ற விலங்குகளும் ஆற்றுப் பக்கம் வந்தன. சிங்கராஜா தரையில் விழுந்து கிடப்பதை பார்த்து பயந்து விட்டன. பிறகு சிங்கராஜா எழுந்து புலியை தாக்கியது. இநத முறை புலிக்கு காயம் ஏற்பட்டது. ஆனாலும் விடாமல் மீண்டும் சிங்கத்தை தாக்கியது. அதன் ஒரு காலை கடித்து காலில் இருந்து ரத்தம் வந்தது. சிங்கராஜா தன் நகங்களால் புலியை பின்புறத்தில் தாக்கியது. சண்டை அதிகரிப்பதால் சீக்கூ கவலையடைந்தது. அது முதிய எட்டு வயதுடைய ஜோல்லி யானையிடம் சென்றது. ஜோல்லி காட்டில்

உள்ள அனைத்து விலங்குகளும் அதற்கும் மதிப்பு அளித்தன. யானை, விலங்கு கூட்டத்திற்கு தலைவராகும். சீக்கூ அதனிடம் அனைத்தையும் கூறி விஷயத்தை தீர்ப்பதற்கு அதனிடம் அறிவுரை கேட்டது. புலியும், சிங்கராஜாவும் இன்னும் சண்டை செய்து கொண்டிருந்தன. ஆனால் யார் அரசன் என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை. ஜோல்லி பாட்டி யானை சண்டையிடும் இடத்திற்கு வந்து பிளறியது. காட்டில் சிங்கம், புலியும் கூட யானையை அசட்டை செய்வதில்லை. ஆகையால் சிங்கமும், புலியும் பிரிந்து தனியாக நின்றன. அனைவரும் அமைதியாக இருந்த போது ஜோல்லி யானை கூறியது. சம்பக்வனம் காட்டில் வசிப்பவர்களுக்கு சொந்தமானது. ஆகையால் அவர்கள் தான் தங்கள் அரசர் யார் என்பதை முடிவு செய்ய வேண்டும். இந்த முடிவு எடுப்பதற்காக நாளை காட்டில் தேர்தல் நடத்தப்படும். விலங்குகள் தங்களின் கூட்டத்தினரோடு திறந்த வெளியில் ஒன்று கூறியிருக்க வேண்டும். பிறகு அவர்கள் தங்களுக்கு பிடித்தமான வேட்பாளருக்கு ஓட்டு போடுவார்கள். யார் அதிக ஓட்டு பெறுகிறார்களோ அவர் அரசராக இருப்பார். தோல்வியடைந்தவர் காட்டை விட்டு போக வேண்டும்.

அடுத்த நாள் காலை விலங்குகள் திறந்த வெளியில் ஒன்று சேர்ந்தன. சீக்கூ முயலும், ஜம்பி குரங்கும் தேர்தலுக்காக எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்தன. ஓட்டுப் போடுதல் காலையில் ஆரம்பித்து

மாலை வரை சென்றது. ஜோல்லி அனைத்து நிகழ்வுகளையும் பார்த்து கொண்டிருந்தது. சூரியன் மறைவதற்கு முன் எல்லோரையும் திடலில் உட்காரச் சொல்லி ஜம்பி மற்றும் அதனுடைய ஆட்களையும் வாக்குகளை எண்ணும்படி கூறியது. ஓட்டுக்குள் எண்ணி முடிக்கப்பட்டதும் ஜோல்லி பாட்டி முன் வந்து வெற்றியடைந்தவர் பற்றி கூறுவதற்கு முன் அது சொன்னது. ஒரு நல்ல அரசன் தன் குடிமக்களை பற்றி அக்கறை எடுப்பவன் தான். அவனது ஆட்சியில் குடிமக்கள் பயமின்றி வாழ்ந்தால் நாட்டில் அமைதி நிலவும். குடி மக்களை பயமுறுத்துவது அல்லது அவர்களை பீதியடைய செய்வது போன்றவற்றை நீங்கள் செய்யக் கூடாது. பயமுறுத்தி குடி மக்களின் மதிப்பையும் அன்பையும் பெற முடியாது. குடிமக்கள் இல்லையெனில் அரசர் கிடையாது.

சம்பக்வனத்து குடிமக்கள் தங்களின் அரசரிடம் அன்பு செலுத்தி மதிப்பவர்கள் ஆகையால் சிங்கராஜா தங்களின் அரசராக மீண்டும் தேர்ந்தெடுத்துள்ளனர். எல்லா விலங்குகளும் குதூகலம் அடைந்தன. சந்தோஷத்தால் சத்தமிட்டன. சிங்கராஜா கூட புன்னகை செய்தது. தோல்வியடைந்த புலி அமைதியாக காட்டை விட்டு சென்றது. சம்பக்வன காடு முழுவதும் மீண்டும் மகிழ்ச்சி ஏற்பட்டது. ●

அழகாக வண்ணம் தீட்டவும்

வழிகாட்டு

மே 8-ஆம் உலக இடம்பெயர்வு பறவை தினம். ஃப்ளமின்கோ தன் நண்பர்களை சென்றடைய உதவி செய்யவும்.



விடை கடைசி பக்கத்தில்

சிரிங்க... சிரிங்க...

டொக், டொக்:
யார் அது?
கங்கா
கங்கா யார்?
அது காங்காரு என்று சொல்லப்பட்டதாக நான் நம்பினேன்.

லோகிதா, வயது 10, புதுசேரி

கே: பர்த்டே கேக் ஏன் கடினமாக பாறை போல் இருக்கிறது?
ப: ஏனெனில் அது மார்பிள் கேக்.

ருத்ரா, வயது 12, வடோதரா

கே: எந்த கேள்விக்கு நீ எப்போதும் ஆமாம் என்று கூற முடியாது.
ப: நீ இன்னுமா தூங்கி கொண்டிருக்கிறாய்?

அக்ஷதா, வயது 10, மும்பை

ஒரு இன்டர்வியூவில் மேனேஜர் சாந்தாவிடம் கேட்டார் 100-க்கு மேல் லெட்டர்ஸ் கொண்ட ஒரு வார்த்தையை நீ கூற முடியுமா?
சாந்தா: போஸ்ட்பாக்ஸ்

அஷ்விபாக், வயது 10, குஜராத்

சான்வி: வேகமாகவும், சத்தமாகவும் மெல்லக் கூடியது என்ன?
கிரண்: கரப்பான்பூச்சி
சான்வி: இல்லை, ஒரு ராக்கெட் சிப்.

ஷரிதா, வயது 8, அகமதாபாத்

ஹ...ஹா... ஹ...ஹா... ஹி...ஹி... ஹி...ஹி...

கே: ஒரு விஞ்ஞானி எவ்வாறு தூய காற்றை சுவாசிப்பார்.
ப: எக்ஸ்பரி-மின்ட்ஸ் உடன்.

நீமா.கே, வயது 7, கேரளா

கே: பிரவுன் முடியுடன் சன்கிளாஸ் அணிந்திருக்கும் அது என்ன?
ப: கோடைக்காலத்தில் காணப்படும் தேங்காய்.

ஷர்தா, வயது 9, பேகல்

பாபு: அம்மா, தேசிய கீதம் பாடும் போது நாம் சிலை போல் நேராக நிற்கிறோம் சரியா?
டீச்சர்: ஆமாம்.
பாபு: தேசிய கீதம் பாடும் போது தேசிய விலங்கு வந்தால் நாம் நிற்போமா? ஓடுவோமா?

பல்லவி, வயது 12, லக்னோ

ராகுல் மற்றும் ஜெகன் நீண்ட நேரம் சிட்டி சென்டரில் ஜாக்கிங் செய்து கொண்டிருந்தனர்.
ராகுல்: எனக்கு களைப்பாக இருக்கிறது. நாம் கோல்டு காபி, கோல்டன் மில்க் குடிக்கலாம். அவை ருசியாக இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.
ஜெகன்: நீ என்ன பைத்தியமா. நமக்கு ஃபுட் பாய்சன் ஏற்படும்.
ராகுல்: எப்படி?
ஜெகன்: 1951-லிருந்து குறிப்பிடப்பட்டுள்ளது. 70 வருட பழமையான கோல்டு காபியை குடிக்க போகிறாயா?

ஓம்மன், வயது 11, பெங்களூரு

டொக்... டொக்...
யார் அது?
வாட்ஸ்
யார் வாட்ஸ்?
டின்னருக்கு வாட்ஸ் நான் பசியோடு இருக்கிறேன்.

சயாஷ், வயது 12, புதுடெல்லி

உங்கள் கதைகள், புதிர்கள், படங்கள், துணுக்குகள் ஆகியவற்றை உங்கள் பெயர், வயது, விலாசம், தொலைபேசி எண்ணுடன் கீழ்கண்ட முகவரிக்கு எழுதவும் : சம்பக், டெல்லி பிரஸ், ஏ-4, ஸ்ரீராம் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், வடாலா, மும்பை-400 031.
email : writetochampak@delhipress.in,
SMS: 9619587613
ஃபேஸ்புக்ல் எங்களைக் காண:
www.facebook.com/ChampakMagazine,
https://www.youtube.com/ChampakSciQ

டமரூ மற்றும் பேங்க் அக்கவுண்ட்

கதை ● சிவேஷ் ஸ்ரீவாஸ்தவ்



அன்பான நர்ஸ் சகோதரன்!

கதை ● வந்தனா குப்தா

பாராஸுடைய அப்பா ஒரு டாக்டர் அவருடைய கிளினிக்கில் நோயாளிக்காக 10 அறைகள் மற்றும் ஆபரேஷன் தியேட்டர் இருந்தன. வெளி டாக்டர்களும் வந்து நோயாளிக்கு சிகிச்சை அளித்தனர். அத்துடன் பல நர்ஸ்களையும் வேலைக்கு வைத்திருந்தார்.

ஒரு நாள் மாலை பாராஸின் தோழி அனு அவனுக்கு சாக்லேட் ஒன்றை கொடுத்தாள். அவளுடைய அண்ணன் மெடிக்கல் காலேஜில் நான்கு ஆண்டுகள் படித்து விட்டு நர்ஸாக அதிகாரபூர்வமாக வந்ததற்காக சாக்லேட் கொடுத்தாக கூறினாள்.

“ஓ உன்னுடைய அண்ணன் நர்ஸ் படிப்பை தேர்ந்தெடுத்தாரா, இது பெண்கள் தான் தேர்ந்தெடுப்பார்கள்.

அதற்கு பதிலாக உன் அண்ணன் டாக்டர் படிப்பை எடுத்திருக்கலாம். என்னுடைய அப்பா புகழ்பெற்ற டாக்டர். அவருடைய சிகிச்சைக்காக நோயாளிகள் காத்து இருப்பர். என் அப்பா வெள்ளை கோட்டை அணிந்து கொண்டு ஸ்டெதஸ்கோப்பை கழுத்தில் போட்டு கொண்டு கம்பீரமாக வருவார்'' பாராஸ் பெருமையாக கூறினான்.

சில நாட்கள் கழித்து பாராஸின் தாத்தாவிற்கு கிட்னியில் கல் இருந்ததால் வலி ஏற்பட்டு, அவருக்கு ஆபரேஷன் செய்து குடைமடைந்தார். மூன்று, நான்கு நாட்கள் கிளினிக்கில் அவர் தங்கியிருந்தார்.

பாராஸ் தன் தாத்தாவை பார்க்க விரும்பி அப்பாவிடம் அனுமதி கேட்டான். “ஆம் நீ போய் அவரை பார்க்கலாம். ஆனால் அவரை தொந்தரவு செய்யக் கூடாது'' அப்பா கூறினார்.

சில நிமிடங்களில் பாராஸ் கிளினிக்குக்கு சென்றான். அங்கு தாத்தாவிற்கு நர்ஸ் ரோஸி என்பவர் மருந்து கொடுத்து கொண்டிருப்பதை பார்த்தான். நர்ஸின் அழகான உடை, சுத்தமாக வெட்டப்பட்டுள்ள தலைமுடி, புன்னகை தவழும் முகம் ஆகியவற்றை பார்த்து பாராஸ் ஆச்சரியமடைந்தான்.

நர்ஸ் ஒவ்வொருவரையும் கவனித்து விட்டு, ஒரு அறைக்குள் சென்றார். பாராஸ் அவரை பின் தொடர்ந்து சென்று அறைக்குள் எட்டி பார்த்தான். அறையில் பாராஸ் வயதுடைய ஒரு சிறிய பையன் நோயாளியாக இருந்தான்.

“என்ன இது நீ இன்னும் பிரேக்ஃபாஸ்ட் முடிக்கவில்லையா?'' நர்ஸ் கேட்டார்.

பையனுடைய அம்மா அவன் சாப்பிட மறுப்பதாக நர்ஸிடம் புகார் கூறினார். நோயாளி பையனோ அது கஞ்சி அதனால் குடிக்கவில்லை என்று கூறினார்.

“ஆனால் கஞ்சி நமது

உடல்நலத்துக்கு நல்லது. நீ குணமடைந்த பின்னர் உனக்கு பழ வகைகள் இட்லி போன்றவற்றை கொடுப்பார். நீ குணமாவதற்கு இப்போது கஞ்சி மற்றும் மருந்துகளை சாப்பிட வேண்டும். இவையெல்லாம் சாப்பிடா விட்டால் நீ எப்படி விரைவில் குடைமடைவது என்று கூறி ரோஸி அவனுக்கு சாப்பிடுவதற்கு கஞ்சியை கொடுத்தார்.

இதற்கிடையில் 7-வது அறையிலிருந்து ஒரு நர்ஸ் ரோஸிடம் வந்து அவள் கணவன் கால் வலியால் அவதிப்படுவதாகவும் உடனடியாக வந்து பார்க்கும் படியும் கூறினாள். ரோஸி அந்த பெண்ணை தொடர்ந்து அறை எண்.7-க்குச் சென்றார். பாராஸ் ரோஸியை பின் தொடர்ந்து சென்று ஜன்னல் வழியாக அறைக்குள் பார்த்தான்.

“உங்கள் காலில் பல இடங்களில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. நீங்கள் அந்த காலில் அதிக எடையை போட்டால் வலி ஏற்படும்” என்று கூறினார். “சிஸ்டர் எனக்கு படுக்கையில் படுத்திருந்து அலுத்து விட்டது. அதனால் எழுந்து உட்கார்ந்தேன்” நோயாளி கூறினார்.

நர்ஸ் ரோஸி படுக்கையை சற்றே உயர்த்தி நோயாளி மற்ற காலின் உதவியோடு எப்படி உட்கார வேண்டும் என்று செய்து காட்டிவிட்டு, “உங்களுக்கு இன்னும் காலில் வலி இருக்கிறது. நான் உங்களுக்கு வலி போக்கும் ஊசி போடுகிறேன்” என்று கூறினார். அவர் திரும்பி வரும் போது அவரது பார்வை பாராஸை நோக்கி சென்றது.

குழந்தை அங்கும் இங்கும் நடந்து கொண்டிருந்ததால் “உனக்கு நோய் தொற்று ஏற்படும். உன் அறைக்கு திரும்பி போ” என்று அவர் தலையை வருடியபடி கூறினார். எவ்வளவு அக்கறையாக இவர் நோயாளியை கவனித்து கொள்கிறார் என



நினைத்தபடி பாராஸ் சென்றான்.

அவன் தினமும் தன் தாத்தாவை பார்ப்பதற்கு கிளினிக்குச் சென்றான். கிளினிக்கில் நர்ஸ் நோயாளிக்கு மருந்து கொடுப்பதையும், நடப்பதற்கு உதவி செய்வதையும், காயங்களுக்கு மருந்து தடவி கட்டு போடுவதையும், இரத்த அழுத்தம் பார்ப்பதையும் கவனித்தான். இவர்கள் எப்படி கஷ்டப்பட்டு உழைக்கிறார்கள் என்று பாராஸ் எண்ணினான். திடீரென்று அவனது தோழி அனுவை நினைத்து கொண்டான். அவளுடைய மூத்த சகோதரன், இந்த நர்ஸ் போன்று நோயாளிகளை கவனித்து கொள்வான்.

அனுவிடம் அவள் நர்ஸுக்கு பதிலாக டாக்டராக வந்திருக்க வேண்டும் என்று கூறியதற்கு வருத்தப்பட்டான்.

சில நாட்கள் கழித்து சர்வதேச நர்ஸ்கள் தினமான மே 12 அன்று தன்னுடைய கிளினிக்கில் வேலை செய்யும் நர்ஸ்களுக்கு அவர்களை சிறப்பிப்பதற்காக பாராஸ் அப்பா பரிசு பொருட்கள் சில வாங்கி வந்திருந்தார்.

இதை பார்த்து விட்டு பாராஸ் தன் அப்பாவிடம், “நீங்கள நல்ல காரியம் செய்துள்ளீர்கள்” என்று கூறினான். தாத்தா கிளினிக்கில் சேர்ந்திருந்த போது, நர்ஸ் எவ்வளவு கஷ்டப்பட்டு வேலை செய்கின்றனர் என்பதை பார்த்தேன் என்று கூறினான்.

“ஆமாம், நர்ஸ் வேலை ஆர்வமுள்ள வேலை மட்டுமல்ல. ஆனால் முற்றிலும் முக்கியமான பொறுப்புள்ள வேலையாகும். ஒரு நோயாளி சரியான முறையில் உட்கார வைக்கா விட்டாலும், தவறான மருந்து நோயாளிக்கு கொடுக்கப்பட்டாலும் பெரும் ஆபத்து ஏற்படும்.

இது மட்டுமல்லாமல் நர்ஸ் இரவு நேரத்திலும் பணி செய்கின்றனர். அப்போது அவர்கள் கவனமாக

வழிப்புடன் இருக்க வேண்டும். நோயாளிகளை தொடர்ந்து கண்காணித்து வர வேண்டும்.

நோயாளிக்கு அன்றைய மருந்து மாத்திரைகளை தர வேண்டும். படுக்கையில் உள்ள வேண்டப்படாத பொருட்களை அகற்ற வேண்டும்.

“மகனே, சில நோயாளிகள் மருத்துவமனையில் படுக்கையில் இருக்கும் போது எரிச்சலடைந்து கோபப்படுவார்கள். மருந்துகள் சாப்பிட்டு கொண்டு, சத்தான உணவுகளை சாப்பிட்டு கொண்டிருப்பார்கள். அவர்களை மிகப் பொறுமையாக, அன்புடன் கவனித்து கொள்ள வேண்டும். இந்த பொறுப்புகளை எல்லாம் நர்ஸ்கள் நன்றாக பார்த்து கொள்கின்றனர்” பாராஸ் அப்பா கூறினார். மே 12-ஆம் தேதி அன்று பாராஸ் அனுவின் வீட்டிற்கு சென்று அவனது அண்ணனிடம் வாழ்த்து அட்டை ஒன்று கொடுத்தான்.

“நான் இன்னும் நர்ஸ் ஆகவில்லை” என்று சிரித்தபடி அனுவின் அண்ணன் கூறினார்.

“விரைவில் ஆகி விடுவீர்கள்” பிறகு பாராஸ் அனுவிடம், “தயவு செய்து என்னை மன்னித்து விடு. எனக்கு நர்ஸ் வேலையை பற்றி தெரியாது. ஆனால் இப்போது உன் அண்ணன் நர்ஸ் ஆக வந்தது பற்றி பெருமைப்படுகிறேன்” என்று கூறினான்.

இதை கேட்டு அனு மகிழ்ச்சி அடைந்தாள்.

AMALGAMATION GRAPHICS

ஒளியின் இயல்புகளை கண்டுபிடி

பேப்பர் துண்டில் வானவில்லை தோன்ற செய்யவும்.

அறிவோம் ஆயிரம்

தேவையானவை:

- டிஷ்ஷு பேப்பர்
- ஸ்கெட்ச் பென்
- தண்ணீர் நிரப்பப்பட்ட ஒரு பிளேட்

செய்முறை:

1. டிஷ்ஷு பேப்பரை பாதியாக மடித்து முதல் பாதியில் ரெயின்போ என்று எழுதவும்.

2. பிறகு பிரித்து விட்டு, கலர் ஸ்கெட்ச் கொண்டு வானவில்லை வரையவும்.

3. மீண்டும் டிஷ்ஷுவை மடிக்கவும்.

4. தண்ணீர் நிரம்பியுள்ள பிளேட்டில் டிஷ்ஷுவை மெதுவாக வைக்கவும்.

காணவும்:

நீங்கள் டிஷ்ஷுவை தண்ணீரில் வைத்ததும் உடனடியாக வானவில் முதல் பக்கத்தில் தோன்றும்.

சிந்திக்கவும்:

எவ்வாறு வானவில் முதல் பக்கத்தில் தோன்றுகிறது?

டிஷ்ஷுவை தண்ணீரில் போட்டதும் அது ஈரமாகி ஒளிபுகும் தன்மை கொண்டதாக மாறி விடுகிறது. வண்ணங்களும், எழுதப்பட்ட வாசகமும் பெரிதாக தெரிகிறது. ஏனெனில் டிஷ்ஷு, உலரும் போது டிஷ்ஷு வெள்ளையாக தோன்றுகிறது. ஏனெனில் எல்லா வண்ணங்களையும் வெள்ளை ஒளியில் பிரதிபலிக்கிறது. ஆனால் அது ஈரமாகும் போது அது எந்த வண்ணத்தையும் பிரதிபலிக்க செய்வதில்லை. இதனால் டிரான்ஸ்ஃப்ரண்டாக தோன்றுகிறது.

ஒளியானது வளைந்து செல்லும் போது பிரதிபலிக்கிறது. இந்த வளைந்த ஒளி ஒளி விலகல் என்றழைக்கப்படுகிறது. ஒளியானது எந்த பொருளின் வழியாக செல்கிறதோ அதை பொருத்து இந்த ஒளி விலகல் ஏற்படும். ஒரு ஊடகத்திலிருந்து மற்றொரு ஊடகத்திற்கு ஒளி செல்லும் போது ஒளி வளைந்து செல்வதை வைத்து ஒளி விலகல் என அளவிடப்படுகிறது. நமது பரிசோதனையில் ஒளியானது காற்றிலிருந்து உலர்ந்த டிஷ்ஷுக்குச் செல்லும் போது அது வளைந்து செல்கிறது. ஏனெனில் இவையிரண்டும் வேறுபட்ட ஊடகங்கள் காற்று மற்றும் டிஷ்ஷு ஒளியானது காற்றிலிருந்து ஈரமான டிஷ்ஷுக்கு செல்லும் போது ஒளியானது வளைந்து செல்வதில்லை. ஏனெனில் தண்ணீரும், காற்றும் மிகவும் வேறுபாடு கொண்டவையல்ல. ஆகையால் தான் டிஷ்ஷு ட்ரான்ஸ்ஃப்ரண்டாக தோன்றுகிறது.

அறியவும்:

ஒளிவிலகல் குறியீடு எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?

விஞ்ஞானிகள் ஒளி புகாத கிளாஸை செய்துள்ளனர். ஒரு பட்டனை தொட்டதும் அது ட்ரான்ஸ்பரன்டாக மாறிவிடுகிறது. மின் அணுவில் சார்ஜ் செய்யும் போது கிளாஸின் ஒளிவிலகல் என மாறிவிடுகிறது. தற்போது சில ஆடம்பர கார்களில் இதுபோன்ற கிளாஸ் சூரிய கூரைகாக உள்ளன. இதன் வழியாக ஒளி செல்வதில்லை மற்றும் டிரான்ஸ்ஃபரண்டாக ஒரு பட்டனை தொட்டதும் மாறி விடுகிறது. எதிர்காலத்தில் நமது வீட்டின் சில சுவர்கள் இதுபோன்ற கிளாஸ் கொண்டு கட்டப்படும். சுவர் முழுவதும் ட்ரான்ஸ்ஃபரண்டாக மாறிவிடும். இதுபோன்ற பொருட்களால் செய்யப்பட்ட மேற்கூரைகளை பற்றி கற்பனை செய்து பாருங்கள். இது ட்ரான்ஸ்ஃபரண்டாக இரவில் தோன்றி நட்சத்திரங்களை பார்க்க காரணமாக இருக்கலாம்.

சொல்லு சொல்லு விடுகதை

உங்களுக்கு தெரியுமா?

1. என்னிடத்தில் நீங்கள் அதிகம் பார்க்கலாம், நேற்றுக்கு முன்னர் இன்று நான் வைத்திருப்பேன்.
   நான் யார்?

2. நான் பிறக்கவில்லை. ஆனால் நான் இங்கு இருக்கிறேன், எனக்கு பெயர் கிடையாது, ஆனால் பல பெயர்கள் எனக்கு கொடுக்கப்பட்டுள்ளன, நான் அறிவியலால் செய்யப்பட்டவன்.
   நான் யார்?

3. நான் ஒரு வார்த்தை, என்னில் மூன்றாவது எழுத்தை நீக்கி விட்டால் நான் நீளமாக வருவேன்.
   நான் யார்?

4. நான் கோட்டையை கட்டுவேன், நான் மலைகளின் கண்ணீராய் கீழே வருவேன் நான் பாலைவனங்களில் அதிகமாக காணப்படுவேன்.
   நான் யார்?

5. மனிதர்கள் இரவும் பகலும் என் மீது நடப்பார்கள், நான் தூங்குவதே இல்லை.
   நான் யார்?

1. உலகப்புகழ்பெற்ற கஜீரா சிற்பங்கள் எங்கு உள்ளன?
   அ. குஜராத்
   ஆ. ஒரிசா
   இ. மத்திய பிரதேசம்
   ஈ. மகாராஷ்ட்ரா

2. மனிதன் முதன் முதலில் பயன்படுத்திய உலோகம் எது?
   அ. இரும்பு
   ஆ. வெண்கலம்
   இ. தங்கம்
   ஈ. செம்பு

3. கீழ்கண்டவைகளில் வெப்பமான புல்வெளி எது?
   அ. தாய்கா
   ஆ. சவன்னா
   இ. பம்பாஸ்
   ஈ. ப்ரேய்ரிஸ்

4. ICAO..... எதைக் குறிக்கிறது?
   அ. சர்வதேச சிவில் ஏவியேஷன் ஆர்கனைசேஷன்
   ஆ. இந்தியன் கார்ப்பரேஷன் ஆஃப் அக்ரிகல்சர் ஆர்கனைசேஷன்
   இ. இன்ஸ்டிடியூட் ஆஃப் கம்பெனி ஆஃப் அக்கவுணட்ஸ் ஆர்கனைசேஷன்
   ஈ. இதில் எதுவுமில்லை

உங்களுக்கு தெரியுமா: *விடைகள்: 1.இ, 2.ஈ, 3.ஆ, 4.அ*

சொல்லு சொல்லு: *விடைகள்: 1.டிக்ஷனரி, 2.குளோன், 3.லாங்ஞர், 4.மணல், 5.நடைபாதை*

வார்த்தை தேடல்

E	I	C	E	C	R	E	A	M	J	K
F	G	H	B	F	F	U	L	U	H	C
Y	M	M	A	M	D	U	A	T	E	L
A	Z	X	L	C	V	B	N	N	M	P
D	Q	W	L	T	H	O	T	U	S	R
I	G	J	L	E	I	G	R	O	U	B
L	H	E	A	T	K	N	I	P	M	A
O	T	Y	A	I	O	A	T	L	M	R
H	Q	C	S	W	E	M	M	K	E	V
G	A	F	G	T	H	B	N	N	R	M
V	U	M	B	R	E	L	L	A	V	S

இங்கு மேலே கட்டத்தில் உள்ள வார்த்தைகள் மேலும் கீழுமாகவும், இடதும், வலதுமாகவும் மாறி இருக்கின்றன. அந்த வார்த்தைகளை கண்டு பிடிக்கவும்.

SUMMER **FUN**
BALL **HEAT**
MANGO **ICECREAM**
UMBRELLA **HOT**
HOLIDAY **VACATION**

விடை கடைசி பக்கத்தில்

லாஜிக் மேஜிக்

க்ளூஸை படித்து விட்டு டைனோசர்களை அவற்றின் வயதோடு இணைக்கவும்.

- டினோ மற்றவர்களில் இளையவர்.
- ஜோஜோவின் உடலில் உள்ள கோடுகள் தான் அதன் வயது.
- கிகி ஜோஜோவை விட நான்கு வயது மூத்தவன்.
- டோலி ஒற்றைப்படை ஆண்டுகளாக உயிருடன் இருக்கிறார்.

5 வயது 6 வயது 8 வயது 9 வயது 10 வயது



ஒவ்வொரு ரோபோட்களும் ஒரு வடிவத்தை தேர்ந்தெடுக்கின்றன. கொடுக்கப்பட்டுள்ள க்ளூவை படித்துவிட்டு யார் எந்த வடிவத்தை தேர்ந்தெடுக்கிறார்கள் என்று காணவும்.

- டிட்டோ வடிவம் வளைவுகளை கொண்டது.
- ரோப்பி ஆறு பக்கங்கள் கொண்டு வடிவத்தை தேர்ந்தெடுக்கிறது.
- ஹேட்டி நான்கு பக்கங்கள் கொண்ட வடிவத்தை பெற்றுள்ளது.
- டிக்கோவின் வடிவம் ஒரு சதுரம் அல்ல.



விடை கடைசி பக்கத்தில்

விசிறிகளின் ரசிகன்!

கதை ● முரளி டி.வி

பாராக் அழகான சிறுமி. அவளின் பெற்றோர் அறையில் சிவப்பு சீலிங் ஃபேன், பாட்டியின் அறையில் வெள்ளை நிற சீலிங் ஃபேன், இவளுடைய அறையில் நீலநிற டேபிள் ஃபேன் இருந்தன. அவளுடைய பூனை பம்மிக்கு ஒரு ஃபேன் வேண்டுமென்று நினைத்தாள்.

“எல்லா இடத்திலும் நமக்கு ஃபேன் தேவைப்படாது” அவளுடைய அம்மா கூறினார்.

பாராக் பாட்டி அவளிடம் வந்து அவளின் கன்னத்தை தட்டி, “வா நாம் போய் இயற்கை ஃபேன்களை அனுபவிப்போம்” என்று கூறினார்.

“இயற்கை ஃபேன்” பாராக் மகிழ்ச்சியுடன் கூறி பாட்டி நாம் போகலாம் என்றாள். இருவரும் வெளியே உலாவ சென்றனர். வீட்டை விட்டு சிறிது தூரம் சென்று ஒரு சிறு பாறை குன்றுக்கு அருகில் பாட்டி நின்றார்.

“கடை எங்கே இருக்கிறது” பாராக் கேட்டாள்.

“இயற்கை நான் பெரிய கடை, நான் உனக்கு அதிக ஃபேன்களை காட்டுகிறேன்” பாட்டி பதில் கூறினாள்.

திடீரென்று பெருங்காற்று வீசியது.



பாராக்கின் ஃப்ராக் காற்றில் அசைந்தது. அந்த காற்று மென்மையாக குளிர்ச்சியாக இருந்தது.

பாராக் கைகளை தட்டி சத்தம் எழுப்பினாள். பாட்டி நம்மை சுற்றி நிறைய புறாக்கள், மைனாக்கள் பறக்கின்றன. அவற்றின் சிறகுகள் ஃபேன் போன்று உள்ளன. பாராக் கை தட்டினாள்.

பாட்டி சில தானியங்கள் வீசினார். புறாவின் கீச் குரலை கேட்டு பல கிளிகள், குருவிகள் அங்கு வந்தன. பறந்து கொண்டிருக்கும் பறவைகள் பாராக்கை மகிழ்வித்தன.

டூடி புறா கூறியது, "நான் உன் வெள்ளை நிற ஃபேன்."

அன்பான காதல் பறவைகள் கூறின, "நாங்கள் உன் பிரவுன் ஃபேன்."

கிளி கூறியது, "என்னை பார் நான் உன் பச்சை நிற ஃபேன்."

திடீரென்று மயில் புதரிலிருந்து வந்தது. அதை பார்த்து பாராக் கத்தினாள். மயில் ஃபேன் அழகான ஃபேன்.

பாராக் அவளுடைய ஃபேன்களிடம் மகிழ்ச்சியாக விளையாடினாள். அப்போது இருட்ட ஆரம்பித்தது. பாட்டி நாம் வீட்டிற்கு போகலாம் என்று கூறினார்.

"டோலி வாத்து மற்றும் ஹீனா கோழி என்னுடைய இரண்டு ஃபேன்களும் எனக்காக வீட்டில் காத்திருப்பர்" என்று பாராக் கூறினாள்.

வீட்டிற்கு திரும்பியதும் அவள் வாத்து மற்றும் கோழியுடன் அமர்ந்து கொண்டாள். அவை தமது சிறகை விரித்தன.

காற்று வீசியது, செடிகள் இலைகள் அசைந்தன. பாராக் முகம் பெரிய புன்னகையுடன் மலர்ந்தது "வாவ் நான் விசிறிகளின் ரசிகன்."

பாராக் தன் அம்மாவிடம் கூறினாள் "ஃபேன் அது சீலிங் ஃபேனா, டேபிள் ஃபேனா வீட்டிற்கு தேவையான பொருள். அது அறையை

அழகுப்படுத்தி, கோடையில் நம்மை குளிர்ச்சியாக வைக்கிறது.”

அம்மா விளக்கமாக கூறினார், “ஃபேன் காற்றை நமது தோலின் மீது செலுத்தும் போது நமது தோலிலுள்ள ஈரப்பதம் ஆவியாகிறது. நமது உடல் குளிர்ச்சி அடைகிறது. சீலிங் ஃபேன் இடத்திலுள்ள வெப்பத்தை அகற்றி குளிர்ச்சியாக அந்த இடத்தை வைக்கிறது.

இதனால் குளிர்ச்சி பலன் கிடைப்பதில்லை. காற்று அதிகமாக வீசுவதற்கு சீலிங் ஃபேன் அறையின் நடுவில் தரைக்கு மேலே 7 அடி உயரத்திலும், சுவற்றிலிருந்து 18 அங்குலத்திலும் பொருத்த வேண்டும். அவற்றை தாழ்வாக தொடங்க விடுவது ஆபத்து.”

“எனக்கு டேபிள் ஃபேன் தான் பிடிக்கும்” என்று பாராக் கூறினாள்.

“தொழிற்சாலை ஃபேன் பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா?” அப்பா கேட்டார்.

அவை தொழிற்சாலையில் சுகாதாரமான சூழ்நிலையை ஏற்படுத்துகின்றன. மாசுவை நீக்குகின்றன. அசுத்த காற்றையும், புகையையும் போக்கி வெப்பத்தை தணிக்கின்றன.

தொழிற்சாலை ஃபேன்கள்


KAVYA KARUNAN

பலவகைகளில் பயன்படுகின்றன” அப்பா கூறினார்.

“ஃபேன்களின் ரசிகனுக்கு இதை எல்லாம் தெரியாமல் போச்சே” பாராக் கூறினாள்.

“சமையலறையில உள்ள ஃபேன் எக்ஸ்காஸ்ட் ஃபேன். இது சமையலறையில் உள்ள நாற்றம் புகை, ஈரப்பதம் போன்றவற்றை அகற்றுகிறது” அம்மா கூறினார்.

திடீரென்று மின்சாரம் நின்று விட்டது. “ஓ என்னுடைய ஃபேன்” பாராக் கத்தினாள்.

ஊஸ்... ஊஸ்... கவலை வேண்டாம். இயற்கையான காற்று அழகாக வீசும். ஃபேன்களின் ரசிகனை அது தட்டிச் செல்லும்.

பாராக்கின் அழகான முகம் புன்னகையுடன் மலர்ந்து பறவைகள் தமது சிறகுகளை விரித்து அழகாக பறப்பதை பார்த்தது. ●


சீக்கூ
படக்கதை ● தாஸ்
இன்றிரவு வெப்பமாக உள்ளது. நாம் டெர்ரஸுக்கு சென்று தூங்கலாம்.
ஆமாம், அருமையான யோசனை.
அவை மேல் மாடிக்குச் சென்று டெர்ரஸில் தூங்க சென்றன.
உப், மீக்கூ சத்தமாக குறட்டை விடுகிறது. என்னால் தூங்க முடியாது.
இரவு முழுவதும் நான் ஆடுகளை எண்ணிக் கொண்டிருக்க வேண்டும் போலிருக்கிறது.
அன்று இரவு இருட்டாகி கொண்டிருந்தது. காவலாளி டிக்கி நாய் சுற்றி வந்து பாடிக் கொண்டிருந்தது.
நான் தங்கிக் கொண்டு காவலிருப்பேன்.
அதன் பாட்டை கேட்டு மீக்கூ விழித்து கொண்டது.
இந்த காவலாளி என்று தூக்கத்தை கெடுத்து விட்டது.
இது எனக்குப் புரியவில்லை. எல்லோரும் விழித்து கொண்டிருந்தால் அவன் காவலாளியாக இருப்பது நல்லதா என்ன?
காவலாளியும் களைப்பு அடைந்து விட்டது.
இப்போது எல்லோரும் விழித்து கொண்டனர். நான் தூங்க போகலாம்.
சுவற்றில் அது தூங்கியது.
எனக்கு களைப்பாக உள்ளது. நான் சிறிது நேரம் தூங்க வேண்டும்.
ஒரு பூனை உணவை தேடி வெளியே வந்தது.
காவலாளி தூங்கி விட்டது. உணவை வேட்டையாடுவதற்கு இது தான் நேரம்.



பூனை மேலே ஏறி டெர்ரஸுக்கு சென்றது.
எலிகள் தூங்குவதை நான் பார்க்கிறேன். நான் அமைதியாக சென்று அவைகளை பிடிக்க வேண்டும்.
பூனை மீக்கூவை பிடித்ததும் மீக்கூ அலற ஆரம்பித்தது.
உதவி.. உதவி..
ஓ... அந்த பூனை மீக்கூவை பிடித்து விட்டது.
எல்லோரும் மேலே இருக்கிறார்கள். நான் கீழே எகிறி குதித்து விடலாம்.
பூனை எகிறி குதித்து கீழே உறங்கி கொண்டிருந்த காவலாளியின் மீது விழுந்தது.
ஆ... ஆ... அது என்ன?
என்னை காப்பாற்றுங்கள். இது டிக்கி காவலாளி ஓடு.
நீ ஓடலாம். நான் உன்னை பிடிப்பேன். உச்.. என்னால் இன்னும் எழுந்திருக்க முடியவில்லை.
காவலாளி தன் தடியை பூனை மீது எறிந்தது.
நான் உன்னை போக விட மாட்டேன்.
தடி பூனை மீது பட்டு பூனை கீழே விழுந்தது.
என்னுடைய கால். பூ... ஹீ...
சீக்கூ மீக்கூவை நோக்கி ஓடியது.
மீக்கூ நீ நன்றாக இருக்கிறாயா?
ஆமாம், நான் நன்றாக உள்ளேன. நான் டெர்ரஸில் தூங்கவே மாட்டேன்.

புள்ளிகளை இணைக்கவும்

இது யார் என்பதை அறிய புள்ளிகளை இணைக்கவும்.



கண்டுபிடிக்கவும்

கட்டத்தில் உள்ள வடிவங்களை கண்டுபிடிக்கவும்.



விடை கடைசி பக்கத்தில்

மேங்கோ பாப்சிக்கிள்

ஜேபா ஹெட்வகர் (பேக்டு ஃபேவர்ஸ்)

தேவையானவை:

- 250 கிராம் மாங்காய் துண்டுகள் அல்லது மாம்பழ சதைப்பகுதி
- 1/4 கப் குளிர்ந்த நீர்
- 1/4 கப் சர்க்கரை



1. சர்க்கரை அளவில் பாதியை எடுத்து கொண்டு மாம்பழ இனிப்புக்கு சமமாக வைத்து கொள்ள வேண்டும். இதை மேங்கோ மற்றும் குளிர்ந்த நீர் இவற்றுடன் நன்கு கலக்கவும்.

2. இதை பாப்சிக்கிள் வார்ப்பில் ஊற்றவும். பாப்சிக்கிள் குச்சுகளை இணைத்து ஃப்ரீசரில் 6-8 மணி நேரம் முழுவதும் செட் ஆகும் வரை வைத்திருக்கவும்.

3. வார்ப்பிலிருந்து பிரித்து விடவும்.

புத்தகங்கள் படிக்கவும் ➡➡➡ வாழ்க்கையில் முன்னேறவும்

புத்தகம் படியுங்கள். அச்சிடப்பட்ட **அழகான சித்திரங்கள்,** அறிவை வளர்க்கும் **கதைகளை** படித்தால் தான் ஞாபக சக்தி அதிகமாகும். டிவி மற்றும் மொபைலின் அசைந்தாடும் சித்திரங்கள் மனதில் இடம் பிடிப்பதில்லை. டிவி கார்டுன்களில் நட்பு, பாசம், உண்மை எங்குள்ளது?

புத்தகங்களை விரும்பிய நேரம் படிக்கலாம். அதில் அச்சிடப்பட்டுள்ள சித்திரங்களை வெட்டி நோட்புக்ஸில் ஒட்டலாம். பிறகு இதில் அழகான வண்ணத்தை பூசலாம். ஜோக்ஸ், புதிர்களை மற்றவர்களுடன் ஷேர் செய்யவும். அப்டுடேட் ஆக இருக்கவும். டிவியை உங்களால் பார்க்க மட்டுமே முடியும்.

ஆனால பஸ், ரயில் என எல்லா இடங்களிலும் புத்தகங்கள் உங்களுக்கு உறுதுணையாக இருக்கின்றன. **புத்தகங்களே நமது நல்ல நண்பர்கள்.**

புத்தகங்கள்
படியுங்கள்
முன்னேறுங்கள்

அம்மாவுக்கு ஒரு பிரேஸ்லெட்

தேவிகா மேனன்

ஸ்மார்ட்

அன்னையர் தினத்தை மே 9-ஆம் நாள் கொண்டாடுங்கள். பரிசுக்காக நீங்கள் வெளியே செல்லவே வேண்டாம். நூலை கொண்டு ஒரு பரிசை செய்யலாம்.

தேவையான பொருள்:

பல்வேறு கலரில் நூற்கண்டுகள், கத்தரிக்கோல், கார்டு போர்டு, க்ளூ, பென்சில்.

செய்முறை:

1. நூற்கண்டு நன்றாக இருந்தால், ஒரே கலரில் இரண்டு நூலை பயன்படுத்தவும். இந்த நூலை ஒன்றாக பிடித்து கொண்டு ஒவ்வொன்றின் முடிவிலும் முடிச்சு போடவும்.



2. கட்டியுள்ள பகுதியில் ஒரு பொருளை வைத்து கீழ்நோக்கி பிடித்து கொள்ளவும். நூல்களை மடித்து விடவும்.



3. மடிப்பதற்கு சரியான நூலை எடுத்து கொண்டு அதை நடுவில் உள்ள நூலின் மீது வைக்கவும். பிறகு இடதுபுற நூலை எடுத்து இரண்டு நூற்களின் மீதும் வைக்கவும். இதை முடியும் வரை தொடர்ந்து செய்து வரவும்.

4. பிரேஸ்லெட் தயார்.

5. அலங்கரிப்பதற்கு கார்ட் போர்டின் மீது ஒரு இதயத்தை வரைந்து வெளிப்புறமாக வெட்டி விடவும்.

6. க்ளூவை இதயத்தின் மீது வைத்து சுற்றிலும் நூலினால் கட்டவும்.

7. பிரேஸ்லெட் இதய பகுதியை வைத்து கட்டி, எஞ்சியுள்ள நூலை வெட்டி விடவும்.

உங்கள் பிரேஸ்லெட் தயார்

நீங்களும் இதே போல் செய்து எங்களுக்கு படமெடுத்து அனுப்பவும் : writetochampak@delhipress.in

கீழே கொடுக்கப்பட்டுள்ள படத்தில் விடுபட்டுள்ள பகுதியையும் வரைந்து, அழகாக வண்ணம் தீட்டவும்.

படத்தை பூர்த்தி செய்



புரு, பெருமையான உதவியாளர்!

கதை ● எஸ். வரலட்சுமி

புரு நரி, உபயோகமில்லாத விலங்கு. பரூக் நரியிடம் வீட்டு வேலையாளாக வேலை செய்தது. ஒரு நாள் பரூக் புருவை கூப்பிட்டு “என்னுடைய மகன் துபாயிலிருந்து வருகிறான். அவனுடைய விமானம் இன்னும் ஒரு மணி நேரத்தில் விமான நிலையத்திற்கு வந்து விடும். அவனுக்கு நாம் வசிக்கும் இடம்

தெரியாது. நீ போய் அவனை அழைத்து வா” என்று கூறியது.

புரு கூறியது, “அவரை எனக்கு தெரியாது. அவரை எப்படி தெரிந்து கொள்வது?”

பருக் அவனை பற்றி விவரமாக கூறியது. “அவன் தடிமனாக, எப்போதும் பீனிட்ரெஸ் அணிந்திருப்பான். அவனுடைய பெயர் பான்னி” இதை போட்டு விட்டு புரு விமான நிலையம் சென்று இங்கும் அங்கும் பார்த்தது. பிறகு பருக் விவரித்தபடி இருந்தது ஒரு நரியை பார்த்தது. புரு அதனிடம் சென்று “உன்னுடைய பெயர் பான்னி?” என்று கேட்டது.

அந்த நரி புருவை மவுனமாக பார்த்து விட்டு முரட்டுத்தனமாக ஆமாம் என்று பதிலளித்தது. புரு சிரித்து விட்டு, “என்னுடன் வா, உன்னை அழைத்து வர ஐயா என்னை அனுப்பினார்” என்று கூறியது. பான்னி தயங்கியபடி புருவை பின்தொடர்ந்து சென்றது. இதற்கிடையில் பருக் டிவி பார்த்து கொண்டிருந்தது. டிவியில் தப்பிச் சென்ற ஒரு குற்றவாளியின் போட்டோவை காட்டி அந்த இளங்குற்றவாளி நான்கு நாட்களாக காணவில்லை என்று முக்கிய செய்தியாக அறிவித்தார்கள்.

பருக் பயந்தபடி வேண்டிக் கொண்டது. “அந்த ஆள் பார்ப்பதற்கு தீவிரவாதி போல் இருக்கிறான்.

அவன் விரைவில் பிடிபட வேண்டும்.”

பிறகு போன் அடிக்க பருக் போனை எடுத்து பேசியது, “ஆமாம், ஆமாம் அது என்னுடைய எனில் நான் உடனே வருகிறேன்.” பிறகு அது நினைத்து கொண்டது, “என் மகன் வர வேண்டியுள்ளதால் நான் அவசரமாக சில வியாபார விஷயமாக வெளியே போக வேண்டியுள்ளது. ஆனால் ஒரு மணி நேரத்தில் திரும்பி விடுவேன் என்று நினைக்கிறேன். புருவிடம் வீட்டின் மற்றொரு சாவி இருக்கிறது. நான்வரும் வரையில் வீட்டையும், பொருட்களையும் அவன் கவனமாக பார்த்து கொள்வான். நான் உண்மையிலேயே ஒரு பொறுப்பான வேலையாளைத்தான் பெற்றிருக்கிறேன்.”

அவர் புறப்பட்ட பின் சிறிது தயங்கிய மீண்டும் நினைத்து கொண்டது. “தப்பித்த குற்றவாளி இங்கு வந்தால் என்ன செய்வது. நாம் ஜன்னல்களையும் மூடி விட்டு ஒரு பாட்டை முணுமுணுத்தபடி வீட்டை விட்டு சென்றார்.

புரு வீட்டிற்கு வந்த வீடு பூட்டியிருப்பதை பார்த்தது. “ஓ ஐயா வெளியே சென்றிருப்பார், பிரச்சனை இல்லை. நம்மிடம் தான் டுப்ளிகேட் சாவி இருக்கிறதே.”

பிறகு கதவை திறந்து இருவரும் வீட்டிற்குள் சென்றனர். புரு சமையலறைக்கு சென்று சமோசாவும்,

குளிர் பானமும் கொண்டு பான்னியிடம் கொடுத்தது. பான்னி அதை விரைவாக சாப்பிட்டது.

பிறகு புரு பான்னியிடம், “நான் உன் அப்பாவிடம் வேலை செய்கிறேன். அவர் சீக்கிரம் வந்து விடுவார்” என்று கூறியது. பிறகு அது வேறு வேலை செய்ய போய் விட்டது.

பான்னி சோபாவிலிருந்து எழுந்து சுற்றிலும் பார்த்தது. படுக்கை அறைக்கு சென்று கப்போர்டை திறக்க முயற்சி செய்தது. புரு அதன் பின்னால் வந்து எதையாவது தேடுகிறீர்களா என்று கேட்டது. “நீங்கள் உடையை மாற்ற நினைக்கிறீர்கள் என எண்ணுகிறேன்” புரு கேட்டது.

“கப்போர்டின் சாவி மெத்தைக்கு அடியில் இருக்கிறது. கப்போர்டிலிருந்து

பான்னி டீ கொண்டு வரும்படி புருவிடம் கூறியது. புரு சென்றவுடன் பான்னி சூட்கேஸில் பணத்தையும், நகைகளையும் வைத்தது. சிறிது நேரத்தில் பரூக் வந்து வீட்டில் யாரும் இல்லாததை கண்டு புரு எங்கே இருக்கிறாய்? பான்னி எங்கே?

பான்னி விரைவாக பரூக்கை தள்ளிவிட்டு வாசல் கதவை நோக்கி கூடியது. ஒரு சூட்கேஸுடன் பான்னி ஓடுவதை பரூக் பார்த்து விட்டது. முதலில் குழப்பம் அடைந்த பிறகு, அது டிவியில் அறிவித்த தப்பியோடிய குற்றவாளி என்று தெரிந்து கொண்டது. ஆனால் பான்னி அவ்விடத்தை விட்டு சென்று விட்டது.

புதிய துணிகளை எடுத்த பின் சாவியை மெத்தையின் அடியில் வைத்து விடு. ஐயா சாவியை பற்றி கவனமாக இருப்பார். கொள்ளையர்கள் அவரின் விலை மதிப்பற்ற பொருட்களையும், பணத்தையும் எடுத்து செல்வார்கள் என்று நினைப்பார். கப்போர்டில் அவருடைய எல்லா நகைகளும், பணமும் இருக்கிறது” புரு கூறியது.

பிறகு சாவியை எடுத்து பான்னியிடம் கொடுத்து விட்டு சென்றது. பிறகு அது திரும்பி வந்து, “நான் உங்களுக்கு உதவி செய்யட்டுமா சார். உங்களுக்கு புது துணி கிடைக்கவில்லையா?” என்று கேட்டது.

பான்னி ஒரு சூட்கேஸ் கொண்டு வரும்படி புருவிடம் கூறியது. புருவும் ஒரு சூட்கேஸ் கொண்டு வந்தது.

பரூக் சத்தமாக கத்தினார் திருடன்... திருடன்..

புரு ஓடி வந்து கேட்டது, “திருடன்.. திருடன்... திருடன் சார்.”

பரூக் பான்னி ஓடிய திசையை காட்டியது. பரூக் பயந்தபடி கேட்டது, “அந்த திருடன் இங்கே என்ன செய்தான். அந்த சூட்கேஸ் என்னுடையது போல் இருக்கிறது?”

சிரித்தபடி புரு கூறியது, “சார், அவன் திருடன் இல்லை. அவன் உங்களுக்கு தெரியவில்லையா?

அவன் உங்களின் மகன் பான்னி. எங்கே போய் விடுவான்."

"ஏய் முட்டாள், எதை பற்றி பேசுகிறாய் புரு."

"நீங்கள் விமான நிலையிலிருந்து அழைத்து வர சொன்னவரை நான் விமான நிலையத்தில் சந்தித்து அழைத்து வந்தேன். நீங்கள் வீட்டில் இல்லை. நான் அவனுக்கு மாற்றுவதற்கு உடையை கப்போர்டிலிருந்து எடுத்து கொடுத்தேன். அவன் ஏன் உடையை மாற்றவில்லை. உங்களுக்கு தெரியவில்லையா?" புரு விளக்கமாக கூறியது.

பரூக் பயத்தில் முனகியது, "கப்போர்டு நீ அவனை படுக்கையறைக்குள் அனுமதித்து இருக்க கூடாது."

"ஏன் சார். அவன் உங்கள் மகன். நான் அவனுக்கு சாவி இருக்குமிடத்தை மட்டும் கூறவில்லை. உங்கள் பணத்தையும், நகைகளையும் பாதுகாக்க ஒரு சூட்கேஸ் கொடுத்தேன். அந்த சூட்கேஸ் தான் அவன் எடுத்து சென்றிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன். ஆனால் அவன் எங்கே போய் விடுவான்" வெகுளியாக புரு கூறியது.

பரூக் சத்தமாக கூறியது,

"முட்டாள், பணம் நகையை பற்றி கூறினாயா?" "ஆமாம் சார், அவன் சூட்கேஸில் எல்லாவற்றையும் வைத்ததை நான் உறுதியாக கூறுகிறேன். அவனிடம் சில்வர் பாத்திரங்களையும் கொடுக்காததால் நீங்கள் என்னிடம் கோபமாக இருக்கிறீர்கள் என எண்ணுகிறேன்" புரு பதில் கூறியது.

ஆனால் பரூக் ஏற்கனவே மயக்கமடைந்து விட்டது.

புரு தனக்குள் கூறிக் கொண்டது, "தன் மகனை வெகு நாட்களுக்கு பிறகு பார்த்த அதிர்ச்சி அடைந்து விட்டார்" என்று கூறிக் கொண்டு ஒரு கிளாஸில் தண்ணீர் கொண்டு வந்து பரூக் முகத்தில் தெளித்தது." ●

தாத்தாவும், சர்வதேச செவிலியர் தினமும்

கதை ● விவேக் சக்ரவர்த்தி




நீ.. ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் பற்றி கேள்விப்பட்டிருக்கிறாயா?
ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் என்பவர் ஒரு நர்ஸ் தாத்தா.
ஆமாம், அவர் ஒரு நர்ஸ். போரில் காயம் பட்ட வீரர்களை நாள் முழுவதும் கவனித்து கொண்டார். அதனால் தான் அவர் 'லேடி வித் லேம்ப்' என்று புகழப்படுகிறார்.
ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் பிறந்த நாளான மே மாதம் 12-ஆம் தேதி சர்வதேச நர்ஸ்கள் தினமாக கொண்டாடப்படுகிறது. சுகாதாரத் துறையில் நர்ஸ்களின் பங்களிப்பை போற்றும் விதமாக கொண்டாடப்படுகிறது. இது நர்ஸ்களை பெருமைப்படுத்துவதாக மட்டுமல்லாது உலகளவில் அவர்களின் வேலைகளை போன்றும் விதமாகவும் ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேலுக்கு மரியாதை செலுத்தும் விதமாகவும் கொண்டாடப்படுகிறது.
நர்ஸ் வேலை எவ்வளவு முக்கியமானது பார்.
ஆமாம், நான் ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் போன்று ஒரு நர்ஸ் பாத்திரத்தில் நான் நடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்.
ஏன் ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் போன்று ஒரு நர்ஸ். நீ ஃப்ளோரன்ஸ் நைட்டிங்கேல் பாத்திரத்தில் நடி. இந்த நாடகம் அவரை அடிப்படையாக கொண்டது தான்.
ஓ.. நீங்கள் இதை முன்னரே கூறியிருந்தால் நான் விவாதம் செய்திருக்க மாட்டேன்.
நான் உனக்கு சொல்வதற்கு முயற்சி செய்தேன். ஆனால் நீ கவனிக்கவில்லை.
SONAL
ராகுல் சொன்னதும், ரியாவின் முகம் சுருங்கியது. தாத்தா சிரித்து கொண்டார்.

சம்மர் மானியா



உங்களுக்கு தேவையானவை : *ஒரு வெற்று பேப்பர், பென், தாயக்கட்டைகள், கேம் பீசஸ்.*

விளையாடுபவர்கள் : *2 அல்லது அதற்கு மேலும்.*

எப்படி விளையாடுவது :

1. *முதலில் விளையாடுபவர் தாயக்கட்டைகளை உருட்டி, அவரின் கேம் துண்டை கொடுக்கப்பட்டுள்ள எண்களின் இடத்திற்கு நகர்த்துவார்.*
2. *விளையாடுபவர் கோடை பொருள் கொண்ட பிளாக்கில் நின்றால், அவருக்கு நிறைய பாயின்டுகள் கிடைக்கும். குறிப்புக்கு ஸ்கோர் அட்டையை சரிபார்க்கவும்.*
3. *அதிக எண்கள் எடுத்த வீரர் அல்லது முடிவு கோட்டை அடைந்தவர் முதல் வெற்றியாளர் ஆவார்.*

ஸ்கோர் அட்டை

	2 பாயின்ட்டுகள்
	1 பாயின்ட்
	5 பாயின்ட்டுகள்
	3 பாயின்ட்டுகள்
	10 பாயின்ட்டுகள்

வெற்றிடத்தை நிரப்பு

வெற்று இடங்களை கலர் கொண்டு நிரப்பி வரிசையை பூர்த்தி செய்யவும்.



விடை கடைசி பக்கத்தில்

வித்தியாசங்களை கண்டுபிடி

இந்த இரண்டு படங்களுக்கும் உள்ள 10 வித்தியாசங்களை கண்டுபிடிக்கவும்.

நாம் மற்றும் அவை

ராட்ஷச நீர் நரி விலங்குகள், வட க்ரீக் நாட்டின் ஆறுகளிலும், மத்திய தென் அமெரிக்காவின் ஆறுகளிலும் காணப்படுகின்றன. இவை பெரியதான நீர் விலங்கு இனத்தை சேர்ந்தவை. இவை ஆறு அடி நீளம் வரை வளர கூடியவை.

மனிதர்கள் போலவே இந்த நீர் கீரி விலங்கினங்களும் சமுதாய விலங்குகளாகும். இவை குழுவாக வாழ்கின்றன. ஒவ்வொரு குழுவும் குடும்பம் அல்லது கூட்டம் என்று அழைக்கப்படுகிறது. இந்த நீர் கீரி விலங்குகள் வம்பு செய்யும் பெரிய விலங்கினம் ஆகும். இவை பெரிய அளவில் பாஷையை வளர்த்துள்ளன என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள். ஏனெனில் இவை குடும்பமாக வாழ்கின்றன.

ராட்ஷச நீர் கீரி மற்ற தன் இன குடும்பத்தினர் ஆபத்தில் சிக்கி கொண்டால் விசில் செய்து எச்சரிக்கை செய்கின்றன. ஹம் அல்லது கூ.. போன்று ஒலி எழுப்பி தங்களின் குடும்பத்தினரை எச்சரிக்கும் அல்லது தங்களின் சிறிய விலங்குகளை எச்சரிக்கும். ஹா ஒலியை எழுப்பி தங்களின் விருப்பத்தை காட்டும். இந்த கீரி விலங்கினத்தின் குடும்பங்கள் தனித்துவமாக குழுப் பாடல் அல்லது ஹோரல் ஒலி எழுப்பி மற்ற குடும்பத்தினரிடம் தங்களின் அடையாளத்தை காட்டுகின்றன. இளம் ராட்ஷச நீர் கீரி விலங்குகளுக்கு 11 வகையான ஒலிகளை எழுப்பக் கூடிய திறமைகள் உள்ளன. எடுத்துக்காட்டாக கவனத்தை ஈர்ப்பதற்காக அவை க்ரீச் என்று ஒலி எழுப்புகின்றன. இவை குழுவாக சேர்ந்து செயல்படும் போது புலம்புவது ஊளையிடுதல் போன்ற செய்கைகளை செய்கின்றன.

நீர் கீரி விலங்குகள் தடிமான ரோமங்களை கொண்டவை. குட்டி போட்டு பாலூட்டும் வகையை சேர்ந்தவை. இவற்றிற்கு ஒது சதுர அங்குலத்தில் மில்லியன் அளவு முடிகள் இருக்கும்.

சாந்தமான ராணி!

கதை ● மல்லிகா சுகுமார்

ஒரு காலத்தில் நூர் என்ற பெயர் கொண்ட பெண் புலி ஒன்று இருந்தது. இது காட்டின் ராணியாகவும் இருந்தது. இது மிகவும் கோபம் கொண்டதாகவும், உறுமல் செய்து காட்டில் உள்ள மற்ற விலங்குகளை தேவையில்லாமல் பயமுறுத்தியும் வந்தது.

இதன் நெருங்கிய உதவியாளர் ஜோஜோ என்ற யானை. இது பிரதம மந்திரியாக இருந்தது. இது மிகவும் அறிவுள்ளது. ஜோஜோ ராணியிடம் கூறியது, "மாட்சிமை பொருந்திய ராணி அவர்களே நீங்கள் குடி மக்களுக்கு பயப்படக் கூடாது. நீங்கள் ராணி என்பதால் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

நூர் பெண் புலி கர்ஜித்து கூறியது, "எதற்கு, அவர்கள் என்னுடைய குடி மக்கள். நான் ராணி. அவர்கள் எனக்கு கீழ் பணிந்து என் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டும்."

ஜோஜோ நூர் புலியிடம், "நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லவா?" என்று கேட்டது.

நூர் புலி கதை கேட்பதற்கு ஆர்வம் கொண்டது. "கதையை சொல்" என்று கூறியது.

ஜோஜோ கதையை சொல்ல ஆரம்பித்தது. ஒரு நாள் பிங்கோ சிங்கம் காட்டில் சுற்றி வந்து ஒரு எலியை பிடித்து கொண்டு, "உன்னை சாப்பிடப் போகிறேன்" என்று கூறியது.

பயத்துடன் எலி கூறியது, "என்னை சாப்பிட வேண்டாம். ஒரு நாள் நான் உங்களுக்கு உதவி செய்வேன்."

"சிறிய எலியே நீ எப்படி எனக்கு

உதவி செய்வாய்? எப்படியோ நீ வேண்டிக் கொண்டதால் உன்னை விட்டு விடுகிறேன். அடுத்தமுறை கவனமாக இரு” சிங்கம் சிரித்தபடி கூறியது.

எலி நன்றி கூறிவிட்டு வீட்டிற்கு ஓடியது. சில நாட்கள் கழித்து அது சிங்கத்தின் அலறலை கேட்டது. “நான் வேட்டைக்காரன் வலையில் மாட்டிக் கொண்டேன். உதவி..”

மூஸி எலி வளைக்குள்ளிருந்து வெளியே வந்தது. அது சிங்கத்திற்கு கொடுத்த சத்தியத்தை நினைத்து கொண்டது. அது சிங்கத்திடம் சென்று சிங்கத்தை சுற்றியுள்ள வலையை கடித்து சிங்கத்தை

வெளியே வரச் செய்தது. சிங்கம் வலையிலிருந்து தப்பித்து வெளியே வந்ததும் எலி ஓட ஆரம்பித்தது. பிங்கோ சிங்கம், “ஓட வேண்டாம். நான் உன்னை துன்புறுத்த மாட்டேன்.”

“அதற்கு என்ன உத்தரவாதம்? நான் உங்களுக்கு பதில் உதவி செய்து விட்டேன். மிகச் சிறிய உயிரினங்களும் உதவியாக இருக்கும் என்று இப்போது உங்களுக்கு தெரிந்திருக்கும். வேட்டைக்காரன் வருவதற்குள் வீட்டிற்கு செல்லுங்கள்” எலி கூறியது.

பிங்கோ சிங்கம் மிகவும் கோபம் கொண்டு எரிச்சல் அடைந்தது. அது எலியை பார்த்து “உன்னை பற்றி என்ன நினைத்து கொண்டிருக்கிறாய் நீ சிறிய....”

இந்நேரத்தில் அவை டயர்களின் சத்தத்தை கேட்டன. பிங்கோ மிகவும் கோபத்தில் இருந்ததால் அதனால் சரியானபடி முடிவெடுக்க முடியவில்லை. தன் உயிரை காப்பாற்ற ஓடியது. அதன் கோபத்தினால் அது வேட்டைக்காரன் வேனை நோக்கி ஓடியது.

சிங்கம் கர்ஜித்தபடி கோபத்துடன் தன் ஜீப்பை நோக்கி ஓடி வருவதை பார்த்த வேட்டைக்காரன் காட்டை விட்டு வேகமாக ஜீப்பை ஓட்டிச் சென்றான். அதிர்ச்சியடைந்து சிங்கம் உட்கார்ந்து விட்டது. அதுக்கு என்ன நேர்ந்தது அது ஆபத்தை நோக்கி ஓடி வந்ததை நினைத்து ஆச்சரியப்பட்டது.

இந்த நாடகத்தை எல்லாம் பார்த்து கொண்டிருந்த மூஸி எலி சிங்கத்தின் முன்னே வந்து உட்கார்ந்தது. பிறகு

சிங்கத்திற்கு அறிவுரை கூற ஆரம்பித்தது. "நீ அதிர்ஷ்டமானவன். அவர்கள் ஓடி விட்டார்கள். உன் இரத்த அழுத்தத்தை டாக்டர் பப்பிள்ஸ் கரடியிடம் பரிசோதித்து கொள். மற்றொரு வழியில் ஓடுவதற்குப் பதிலாக நீ அவர்களை நோக்கி ஓடினாய். நீ கோபமாக இருக்கும் போது உன்னால் சரியானபடி முடிவு எடுக்க முடியவில்லை.

பிங்கோ கர்ஜனை செய்தபடி "யார் அந்த டாக்டர் பப்பிள்ஸ் கரடி? இரத்த அழுத்தம் என்றால் என்ன?"

மூஸி எலி கூறியது, "டாக்டர் பப்பிள்ஸ் கரடி இரக்க குணமுள்ள சாந்தமாக பேசக் கூடிய டாக்டர். நான் அவரிடம் உன்னை அழைத்து செல்கிறேன். எல்லா பெரிய, சிறிய விலங்குகள், பறவைகள் தங்களின் உடல் நலப் பிரச்சனைக்காக அவரிடம் தான் செல்கின்றன.

இரத்த அழுத்தம் பற்றிய உன் கேள்விக்கு அவர் பதில் கூறுவார்." அவை இரண்டும் டாக்டர் பப்பிள்ஸ் கிளினிக்கு சென்றன. ஏற்கனவே சில நோயாளிகள் காத்துக் கொண்டிருந்தனர். போங்கி கிளி தன் உடைந்த மூக்கிற்கும், முயல் உடைந்த காலுடனும், கிரிம்பி பன்றி மற்றும் ரீனி பறவை அதன் சிறகில் சுற்றியுள்ள நூலை எடுப்பதற்கும் அங்கு காத்திருந்தன.

இவர்கள் முறை வந்தவுடன் இரண்டும் கிளினிக்குள் சென்று டாக்டரின் அருகில் அமர்ந்தன. அவர் பிங்கோ சிங்கத்தின் இரத்த அழுத்தத்தை பார்த்து விட்டு, "உங்களுக்கு உயர் ரத்த அழுத்தம் உள்ளது. உங்களின் மனோ நிலையை மாற்றி கொள்ள முயற்சி செய்யுங்கள்.

ஐந்து நாட்கள் மற்றொரு செக்அப்புக்கு வர வேண்டும். இரத்த அழுத்தம் தொடர்ந்து உயர்வாக இருந்தால் நான் உங்களுக்கு சில மாத்திரைகள் கொடுக்க வேண்டியிருக்கும்."

பிங்கோ திகைப்படைந்தது. டாக்டர் பப்பிள்ஸ் விளக்கமாக கூறியது, "நல்லது உங்களின் கோபம் மற்றும் டென்ஷனால் நீங்கள் என்ன எதிர்பார்க்கிறீர்கள். காட்டின் அரசன் என்றால் சத்தமாக கோபம் கொண்டு கத்த வேண்டும் என்பதில்லை. கத்தி கொண்டும், சத்தமிட்டுக் கொண்டும் சுற்றி வருபவர்கள் முதிர்ச்சியடையாதவர்களாகும். நீங்கள் அமைதியாக இருக்க கற்றுக் கொள்வது நல்லது.

அமைதியாக இருப்பதால் காட்டில் உள்ள விலங்குகள் பறவைகளை புரிந்து கொள்ள முடியும். நகரத்தில் வாழும்

மனிதர்களுக்கு உயர் இரத்த அழுத்தத்திற்கு மாத்திரைகள் தேவைப்படுகிறது. நாம் அமைதியாக இருக்காவிடில் அந்த நிலைமை நமக்கும் ஏற்படும்.”

பிங்கோ “இரத்த அழுத்தம் என்றால் என்ன?” என்று கேட்டது.

டாக்டர் பப்பிள்ஸ் கரடி விளக்கமாக கூறியது, “இரத்த அழுத்தம் என்பது ஒரு அளவீடு. இதயம் எவ்வாறு கடினமாக வேலை செய்து, ரத்தத்தை ரத்த குழாய் வழியாக தள்ளுகிறது என்பதின் அளவீடு.

நீங்கள் கோபமாகவோ, மனஅழுத்தத்துடன் இருந்தால் இதயம் வழக்கத்திற்கு மாறாக கடினமாக வேலை செய்து இரத்த அழுத்தத்தை உயர்த்துகிறது. இது உங்களின் உடலை மட்டும் பாதிப்பதில்லை, மனதையும் பாதிக்கிறது. மூஸி எலி நீங்கள் வேட்டைக்காரரின் வேனை நோக்கி ஓடியது பற்றி என்னிடம் கூறியது. அது அறிவுள்ள எலி. நீங்கள் நல்ல நண்பனாக இருக்க வேண்டும்.”

பிங்கோ சிங்கம் டாக்டர் பப்பிள்ஸ் கரடியிடம் கூறியது, “நீங்கள் கூறுவது தான் சரி. நாங்கள் நல்ல நண்பர்கள். இப்போதிலிருந்து நான் சாந்தமாக இருப்பேன்.” பிறகு எலியிடம் திரும்பி “நீ முன் முதுகில் ஏறிக் கொண்டு காட்டை சுற்றி பார்க்கலாம்” மூஸி எலி மகிழ்ச்சியடைந்தது. அது தான் சாந்தம் என்பது. தேங்க்யூ பிங்கோ.

ராணி நூர் பெண் புலி அமைதியாக கதையை கேட்டது. சிறிது நேரம் சந்தித்து விட்டு ஜோஜோ யானையிடம், “ஓகே நான் இனிமேல் சாந்தமான ராணி.”

கோபமான ராணி, சாந்தமான ராணியாக மாறி விட்டது. ●

சுகாதார தேடல்

மே 12-ஆம் தேதி உலக நர்சஸ் தினமாகும். கீழேயுள்ள படத்தை பார்த்து விட்டு ஒரு மருத்துவமனையில் காணக்கூடிய 10 பொருட்களை கண்டுபிடிக்கவும்.

விடை கடைசி பக்கத்தில்

இது உங்கள் பக்கம்



ஆராபி விபாஸ், வயது 8,
கோயம்புத்தூர்

உள்ளே ஒரு வெளிச்சம்

நான் வீட்டை விட்டு வெளியே சென்ற முதல் நாள், நான் வெளியில் சுற்றித் திரிந்தேன், நான் வெளிச்சத்தை பார்த்தேன், சிறிது கவனித்து பார், இது தான் நீ இருக்கின்ற வழியா? நீ எங்கு வேண்டுமானாலும் போகலாம் என்பதை நினைவில் கொள். வெளிச்சம் என்னிடம் கூறியது. நீ காணாமல் போய் விட்டால், உள்ளேயிருக்கும் வெளிச்சத்தை நினைத்து கொள், அது ஒரு நட்சத்திரத்தை போல் மின்னும்படி செய், நீ யார் என்று எண்ணிப் பார், அது ஒரு கனவா? வீட்டிற்கு சென்று பார், அது ஒரு வெளிச்சம்.

கீத் கவுர், வயது 11,
புதுடெல்லி

அனிகா, வயது 9,
அரியானா

டிக்-டாக், டிக்-டாக்

டிக்-டாக், டிக்-டாக் எல்லா நாட்களும் கடிகாரத்தில் செல்கின்றன. நேரம் ஏன் வேகமாக ஓடுகின்றது? நான் என் நண்பர்களிடம் பேச விரும்பும் போது டிக்-டாக், டிக்-டாக் எல்லா நாட்களும் கடிகாரத்தில் செல்கின்றன.
என் கைகளிலிருந்து நேரம் நழுவிச் செல்கின்றது. நான் பூட்டி நிறுத்த விரும்புகிறேன். டிக்-டாக், டிக்-டாக் எல்லா நாட்களும் கடிகாரத்தில் செல்கின்றன.
நாம் விளையாடும் போதும், வேலை செய்து கொண்டிருக்கும் போதும் அது நமக்கு நாள் முழுவதும் நினைவூட்டி கொண்டு இருக்கிறது.

பாவுர்வி, வயது 11,
ராஜஸ்தான்

திஷ்யா மிட்டல், வயது 6,
புதுடெல்லி

வாழ்க்கை சக்கரம்

வறண்ட யூகலிப்டஸின் உயரத்திலிருந்து பார்க்கின்ற கிளிகளுக்கு மாமரத்தின் உள்ளேயுள்ள பொந்துகள், நாம் பார்க்கின்ற பூக்கள் மற்றும் பழங்கள் இவையெல்லாம் நாம் கவனிக்கும் வாழ்க்கை சக்கரத்தின் பகுதிகள், அவை தங்கத்தை விட மதிப்பு மிக்கவை. அதிசயமான பல பொருட்கள் மின்னலையும் பயமுறுத்தும் இடியையும் இயற்கையின் ரகசியத்தை நீங்கள் கொடுக்க விரும்பினால் அதன் தகுதியான இடத்தை அதற்கு கொடுங்கள். அது ஒரு சங்கிலி, சக்கரத்தின் ஆரம்பம் இயற்கை அதன் வாழ்வாரத்தின் சக்தி, ஒவ்வொரு இலையும் ஒரு கதையை சொல்லக் கூடும், பறவைகள் தங்குவதற்கு ஒரு இடம் இருப்பது போல் நீங்கள் நான் என்ற சக்தியை, ஒவ்வொரு மரத்திலும் உள்ள துவாரங்கள் போல பார்த்து கொள்ளுங்கள், ஆர்ப்பரித்து கொட்டும் அருவி உங்களை பார்த்து சிரிக்கிறது, விளையாடுவதற்கு உங்களை அழைக்கின்றது.

அனுஷா, வயது 11, ஜபல்பூர்

க்ரிஷ்மா, வயது 9, பெங்களூரு

சான்வி, வயது 12, கேரளா

பூக்கள்

தோட்டத்திலும், வயல்வெளியிலும் அழகான வண்ணத்தில் வடிவத்தில் பூக்கள் தூவி காணப்படுகின்றன. கற்பனை எட்டாத வாசனையுடன் காற்றில் அவை நடனமாடுகின்றன. சப்தமிட்டு கொண்டு திரிகின்ற தேனீக்கள், வண்ணத்துப்பூச்சிகள் உடன் வழியில் வருகின்றவர்களுக்கு ஆனந்தத்தையும் அமைதியையும் கொடுத்து கொண்டிருக்கின்றன. இரவு பொழுது ஆரம்பிக்க போகின்றது விரைவில் அவைகளின் தலைகள் கீழே குனிய போகின்றன.

வசுந்தரா, வயது 8, கொல்கத்தா

இந்த பட்டத்தை மும்பையில் வசிக்கும் நமது 8 வயது வாசகி சாஷா தேஜாஸ் தயாரித்து அனுப்பியுள்ளார்.

உங்கள் கதைகள், புதிர்கள், படங்கள், துணுக்குகள் ஆகியவற்றை உங்கள் பெயர், வயது, விலாசம், தொலைபேசி எண்ணுடன் கீழ்கண்ட முகவரிக்கு எழுதவும்:

சம்பக், டெல்லி பிரஸ், ஏ-4, ஸ்ரீராம் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், வடாலா, மும்பை-400031.

writetochampak@delhipress.in & SMS: 9619587613

www.facebook.com/ChampakMagazine

http://www.youtube.com/ChampakSciQ

விடை பக்கம்:

பக்கம் 9: வழிகாட்டு :



பக்கம் 27: கண்டுபிடிக்கவும்:

பக்கம் 41: வெற்றிடத்தை நிரப்பு:



பக்கம் 47: சுகாதார தேடல்:

பக்கம் 19: வார்த்தை தேடல்:

E	**I**	**C**	**E**	**C**	**R**	**E**	**A**	**M**	J	K
F	G	H	**B**	F	**F**	U	L	U	H	C
Y	M	M	**A**	M	D	**U**	A	T	E	L
A	Z	X	**L**	C	V	B	**N**	N	M	P
D	Q	W	**L**	T	**H**	**O**	**T**	U	**S**	R
I	G	J	L	E	**I**	**G**	R	O	**U**	B
L	**H**	**E**	**A**	**T**	K	**N**	I	P	**M**	A
O	T	Y	**A**	I	O	**A**	T	L	**M**	R
H	Q	**C**	S	W	E	**M**	M	K	**E**	V
G	**A**	F	G	T	H	B	N	N	**R**	M
V	**U**	**M**	**B**	**R**	**E**	**L**	**L**	**A**	V	S

பக்கம் 20 : லாஜிக் மேஜிக் : *டினோவிற்கு 5 வயது, ஜோஜோவிற்கு 6 வயது, கிகிக்கு 10 வயது, டோலிக்கு 9 வயது, டின்னோவிற்கு 8 வயது.*

டிடோவின் தேர்வு வட்டம், ரோப்பின் தேர்வு ஆறுகோணம், ஹேரட்டியின் தேர்வு சதுரம், டிக்கோவின் தேர்வு முக்கோணம்

WE SPEAK IN 30 DIFFERENT CONSUMER VOICES.

BECAUSE EVERY BRAND IS UNIQUE.

With virtually every age group, income segment and language covering 30 million Indians, we are the most diverse magazine group in India. So next time you want to address anyone in India, you are better off speaking to the **Delhi Press** Group today.

DELHI PRESS

To subscribe to our magazines Call/SMS/WhatsApp: 08588843408,
E-mail: subscription@delhipress.in, You can also subscribe online at www.delhipress.in/subscribe

THE CARAVAN · CHAMPAK · सरिता · गृहशोभा · चंपक · मुक्ता · सरस सलिल · फार्म N फूड · सत्यकथा · मनोहर कहानियां · Highlights CHAMPS · Highlights Genies · MOTORING WORLD

PARLE
Fab!
JAM-IN
With Mixed Fruit Jam
With Strawberry Jam
With Black Currant Jam
BISCUITS